SRI S. K. SAMBANDHAN : Sir, does it mean that the action on the part of the Government in confiscating the issue is not proper?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : The Government considered it quite proper to confiscate the issue.

Polytechnics and Teachers' Training Schools

* 114 *Q.*—SRI M. ETHIRAJULU : Will the Hon. the Minister for Industries be pleased to state the number of seats available in several Polytechnics and Teachers' Training Schools for S.S.L.C. candidates for the year 1964-65?

THE HON. SRI R. VENKATARAMAN : Polytechnics including special institutions imparting diploma courses—4,430.

Teachers Training Schools—8,071.

திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, எஸ். எஸ். எல். சி. தேர்வு பெற்ற மாணவர்களில் இப்போது ஏராளமானவர்கள் இந்த துறையில் விண்ணப்பம்போட்டு இடம் கிடைக்காத நிலைமை ஏற்பட்டிருப்பது தெரியுமா? இப்போது இருப்பதைப்போல இரண்டு மடங்கு இடமாவது இருந்தால் அந்தத் துறையில் ஈடுபட விரும்புகிறவர்களுக்கு வாய்ப்பு அளிக்கமுடியுமென்பதை அரசாங்கம் உணருகிறதா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : தேவை எவ்வளவு இருக்கிறதோ அந்த அளவுக்குத்தான் இடம் இருக்கவேண்டும். இல்லாவிட்டால் வேலையில்லாத் திண்டாட்டம் உபரியாகிவிடும். நாம் ராஜ்யத்தில் கணக்கெடுத்தால் 3,600 பேர்களுக்குத்தான் மூன்றாவது திட்டத்தில் தேவையிருக்குமென்று எதிர்பார்த்தோம். இருந்தாலும் 4,430 இடங்கள் பாலிடெக்னிக்கில் கொடுத்திருக்கிறோம். நான்காவது திட்டத்தில் இன்னும் விஸ்தரிக்கப்படுவதற்கான ஏற்பாடுகளும் இருக்கின்றன.

திரு. எம். எத்திராஜுலு : நான்காவது திட்டத்தில் மொத்தம் எவ்வளவு மாணவர்கள் பாலிடெக்னிக் ஸ்கூலில் சேரமுடியும்? எவ்வளவு திறக்கமுடியும் ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: மேற்கொண்டு இன்னும் மூன்று பாலிடெக்னிக்குகள் திறக்கலாம் என்று யோசனை இருக்கிறது. முடிவு எடுக்கப்படவில்லை. நான்காவது திட்டத்தின் அளவு தீர்மானித்த பிறகுதான் திட்டவட்டமாகக் கூறமுடியும்.

திரு. எஸ். கே. சம்பந்தன்: இந்தப் பள்ளிகளில் படித்து வருகிறவர்கள்—தகுதி உடையவர்கள்—குறைவாக இருக்கிறார்கள். தகுதியுடையவர்கள் கிடைப்பது சில இடங்களில் சிரமமாக இருப்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா? அப்படியிருந்தால் இன்னும் அதிகமாக விரிவுபடுத்த அரசாங்கத்திற்கு யோசனை உண்டா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: அந்த மாதிரி நிலைமை இப்போதில்லை. எனக்குத் தெரிந்தவரையில் போதுமான அளவுக்கு பாலிடெக்னிக்கில் படித்தவர்கள் கிடைக்கிறார்கள். அதிகப்படியாக டிமாண்டு இல்லை. அதிகப்படியான சப்ளையும் இல்லை என்ற நிலைமைதான் இருக்கிறது.

திரு. க. அன்பழகன்: தலைவர் அவர்களே, ஆசிரியர் பயிற்சி பெற்றவர்கள், செகண்டரி கிரேடு ஆசிரியராக வருகிறவர்கள், போதுமான அளவு இல்லாததால் அந்தத் துறையிலுள்ள பயிற்சி நிலையங்களை அதிகப்படுத்த முடியுமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: அது என்னுடைய சகா முதலமைச்சர் அவர்களுக்குப் போடவேண்டிய கேள்வி.

SRI M. RAJAH IYER: In the matter of admission to Polytechnic, Sir, will those students who have opted for the pre-technological courses in the S.S.L.C. be given preference?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: பாலிடெக்னிக் கோர்ஸ் மூன்று வருஷப்படிப்பு நம்முடைய ராஜ்யத்தில் இருக்கிறது. மத்திய அரசாங்கத்தில் இரண்டு வருஷம் பாலிடெக்னிக் கோர்ஸ் ஆகவும் ஒரு வருஷம் பி.யு.சி. படித்தவர்களாக இருக்கவேண்டுமென்றும் நிலைமை வைத்திருக்கிறார்கள். நாம் நம்முடைய திட்டத்தை மாற்றவேண்டாமென்று முதல் வருஷத்தை Pre-Technological Course என்றும் பாக்கி வருஷத்தை பாலிடெக்னிக் கோர்ஸ் என்றும் வைத்திருக்கிறோம். எல்லோருக்கும் அட்மிஷன் கிடைக்கும் என்று எதிர்பார்க்க முடியாது.

திரு. என். ஆர். தியாகராஜன்: தலைவர் அவர்களே, மதுரை, ராமனுதபுரம், திருநெல்வேலி ஜில்லாக்களில் ஆசிரியர் வேலைக்குப் படித்துவிட்டு வேலையில்லாமல் நூற்றுக்கணக்கானவர்கள் எனக்குத் தெரிந்தவர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு வேலை கிடைக்க ஏற்பாடு செய்யப்படுமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: அது முதல் அமைச்சர் அவர்களுக்குப் போடவேண்டிய கேள்வி.

திரு. க. அன்பழகன்: தலைவர் அவர்களே, தேவையை ஒட்டி எவ்வளவு பேர் தொழில் துறையில் ஈடுபடுவதற்கு அவசியம் இருக்கிறதோ அதையொட்டி பயிற்சி அளிக்கப்படுமென்று அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். இந்த பாலிடெக்னிக் துறையில் பயிற்சி பெற்ற மாணவர்கள் பலர் தாங்களாகவே தனியாகத் தொழில் நடத்தக்கூடும் என்ற நிலைமை இருப்பதால் வருகிற மாணவர்களை ஒட்டி இடமளிக்க ஏற்பாடு செய்வதற்கு அரசாங்கம் முன்வருமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: அதுதான் சர்க்காரின் நோக்கமும் கூட. நான்காவது திட்டத்தில் அந்த மாதிரி செய்யலாம் என்று ஏற்பாடு செய்திருக்கிறோம்.